# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1478/7 - 2007 ජනවාරි 01 වැනි සඳුදා - 2007.01.01

*1478/7 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

அரசியலமைப்பின் 44 (2) ஆம் பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய 2006 ஆம் ஆண்டின் 12 இலக்க, முத்திரை கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, மகிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இக்கட்டளை மூலம் அப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் 5 ஆந் திகதிய 1465/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட கட்டளை 2007.01.01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்கின்றேன்.

மகிந்த ராஜபக்ஷ,<br>சனாதிபதி.<br>(நிதி, திட்டமிடல் அமைச்சர்.)

நிதி, திட்டமிடல் அமைச்சு,<br>கொழும்பு 1,<br>2006 திசெம்பர் 29.

**அட்டவணை**

1. அவ் அட்டவணையின் 26 ஆவது விடயத்திற்கு புறம்பாக கீழ்வரும் புதிய விடயத்தினைச் சேர்த்துக்கொள்வதுடன் :-

27. ஏதேனும் அலகு பொறுப்புச் சான்றிதழ் வழங்குதல், கைமாற்றுதல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பிலான ஏதேனும் அலகுப் பொறுப்புச் சான்றிதழொன்று அல்லது பரஸ்பர நிதியொன்று.

28. 1997ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கியின் கீழ் தாபிக்கப்பட்ட வங்கியொன்று மூலம் ஒரு கடனுக்கான ஏதேனும் பிணைப் பொறுப்புத் தொடர்பில் ஆக்கப்பட்ட நிறைவேற்றப்படத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் சாதனம் அல்லது வங்கியினால், வங்கித்தொழில் தொடர்பில் ஆக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஏதேனும் தொடர்பில் ஆக்கப்பட்ட அல்வது நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம் அத்துடன் வங்கியின் சார்பாக வேறு எவரேனும் நபரினால் ஆக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட சாதனம்.

*1-286*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.